INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

HRDAG Statisticians for Human Rights

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

12 டிசெம்பர் 2018

**கூட்டு ஊடக அறிக்கை: 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் சரணடைந்த பின்னர் இலங்கையில் இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்த 500 வரையான தமிழர்கள் காணாமற்போயிருப்பதாக புதிய ஆய்வொன்று மதிப்பிடுகின்றது.**

ஜெகானஸ்பேர்க்/ சான் பிரான்சிஸ்க்கோ: இலங்கை இராணுவம் காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு போரின் முடிவில்/ மே 18 2009 இனை அண்டிய காலப் பகுதியில் தங்களது பாதுகாப்பில் இருந்து காணாமற்போன கிட்டத்தட்ட 500 வரையான தமிழர்களுக்கு என்ன நடந்தது என்று விளக்கம் கூற வேண்டும் என பெயர்பட்டியல்களை ஒழுங்குபடுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு வரும் இரண்டு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

உலகிலேயே வலிந்து காணாமற்போனவர்களை பெரும் எண்ணிக்கையாக கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை உள்ளது ஆனால் இந்த 500 பேரும் நாட்டில் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் காணாமற்போனமை குறிப்பிடத்தக்கது. இந்த 500 என்ற எண்ணிக்கையை மதிப்பீடு செய்தமை தொடர்பான விபரமான விளக்கத்தை தயதுசெய்து "How many people disappeared o n 17 - 19 May 2009 in Sri Lanka?"[1] இல் பார்க்கலாம்.

'இந்த அளவில் 2009 இல் சரணடைந்து காணமற்போனமை தொடர்பில் உடனடியான விசாரணை அவசியம்' என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். மாறாக, கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் கடந்தும் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படையணியின் தளபதி இன்னமும் எவராலும் விசாரிக்கப்படவில்லை ஐ நாவின் அறிக்கைகளில் இருந்தும் சாட்சியாளர்களின் வாக்குமூலங்களில் இருந்தும் இந்த சரணடைதல்களின் போது இவர் அங்கு பிரசன்னமாகியிருந்தார் என்பது எங்களுக்கு தெரியும். மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா துணை ஜெனரலாக[2] பதவி உயர்த்தப்பட்டு இராணுவத்தின் மனித உரிமைகள் அலுவகத்திற்கு பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்டமையானது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை மொத்தமாக அவமதிக்கும் செயலாகும். இந்தக்குடும்பங்களுக்கு பதில் வேண்டும் - அவர்கள் உண்மையைத் தெரிந்து கொள்ளும் தகுதியுடையவர்கள் மற்றும் உரிமையுடையவர்கள்.''

ITJP ஆனது பல வருடங்களாக போரின் முடிவில் காணாமற்போனவர்களின் பெயர் விபரங்களை தப்பிப் பிழைத்தவர்களிடமிருந்து சேகரித்து வருவதுடன் , இப்பொழுது 300 இற்கும் மேற்பட்ட பெயர்களும் , படங்களும் இரண்டு மொழிகளைக் கொண்ட இணையத்தளத்தில்[3] போடப்பட்டுள்ளன.

1 https://hrdag.org/wp-content/uploads/2018/12/HRDAG-ITJPSL-2018-12-12-1.pdf
2 ITJP PRESS RELEASE: SRI LANKA FLOUTS UN COMMITMENTS BY APPOINTING ALLEGED WAR CRIMINAL TO ADMINISTER ARMY,
31 March 2017, http://www.itjpsl.com/assets/press/31-March-2017-ITJP-PRESS-RELEASE-3.pdf

செயற்பாட்டாளர்களாலும் இலங்கைக்குள் இருக்கும் குடும்ப உறுப்பினர்களாலும் சேகரிக்கப்பட்ட இந்தப் பட்டியலும் வேறு பட்டியல்களும் மனித உரிமைகள் தகவல் ஆய்வு குழுவினால் ( HRDAG) மொத்த எண்ணிக்கை எவ்வாறு இருக்கலாம் என்பது பற்றி ஒரு புள்ளி விபர ஆய்வை தயாரிப்பதற்காக ஆராயப்பட்டது.

‘நாங்கள் உள்ளே பார்க்க முடியாத இரண்டு இருட்டு அறைகளை கற்பனை செய்து கொள்வோம் என புள்ளிவிபரவியலாளர் டாக்டர் பற்றிக் போல் விபரிக்கின்றார், நாங்கள் முதலாவது அறைக்குள் பந்துகளை எறியும் போது அவை ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளும் போது அவை ஒரு சத்தத்தை உருவாக்கும் , கிளிக் , கிளிக் , கிளிக் என்ற சத்தத்தை கேட்கலாம். நாங்கள் அந்தப் பந்துகளை அதே விசையுடன் இரண்டாவது அறைக்குள்ளும் எறிகின்றோம் அப்போது கிளிக் என்ற சத்தம் கேட்கும். எமது உள்ளுணர்வின் படி இரண்டாவது அறை பெரிதானதாக இருக்கும் ஏனெனில் பந்துகள் பரவக்கூடிய மாதிரி இருக்கின்றது எனவே அவை குறைந்த தடவைகள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டன. இது பல்வேறு பட்டியல்களில் ஒன்றுடன் ஒன்று பொருந்தும் பெயர்களில் இருந்து மொத்தமாக காணாமற்போனவர்களின் மொத்த எண்ணிக்கை எந்த வீச்சுக்குள் இருக்கும் என்பதைக் குறிக்கும் ஒரு மதிப்பீட்டை எவ்வாறு நாம் உருவாக்குகின்றோம் என்பது பற்றிய இந்த இயல்பான விளக்கமாகும்.’’

‘2011 இல் முதல் அறிக்கையில் 20 காணாமற்போதல்கள்[4] குறிப்பிடப்பட்டது, பின்னர் 2014[5] இல் நாங்கள் 103 பெயர்களைக் கண்டு பிடித்தோம், இந்த வருட முற்பகுதியில் அது 280[6] ஆக உயர்வடைந்தது அத்துடன் HRDAG இல் உள்ள எமது சகதோழர்கள் அது இப்பொழுது 500 இற்கு கூடுதலாக இருக்கிறது என நம்புகிறார்கள். இது தொடர்ந்தும் தகவல்கள் சேகரிப்பதன் முக்கியத்துவத்தை காட்டுவதுடன் இலங்கைக்கு உள்ளும் அத்துடன் போர்க் காலத்தில் அங்கிருந்து தப்பி வந்த பல முக்கிய சாட்பியானர்கள் இருக்கும் இலங்கைக்கு வெளியேயும் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் இது காட்டுகின்றது’ என சூக்கா தெரிவித்தார்.

ITJP மற்றும் HRDAG உலகெங்கும் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களையும் அவர்களது முன்னாள் சகபாடிகளையும் அத்துடன் இலங்கைக்கு உள்ளே விபரங்களை திரட்டி அவற்றைப் பகிர்ந்து இந்த வேலையை சாத்தியப்படச் செய்த தமிழ் மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது. இந்த நபர்களின் பெயர்களை அவர்களுடைய சொந்தப் பாதுகாப்பு கருதி குறிப்பிடவில்லை. காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு தமது அன்புக்குரியவர்கள் எங்கிருக்கிறார்கள் மற்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறியும் மாற்றமுடியாத உரிமை உண்டு. அந்த குடும்பங்களுக்கு உண்மையையும் மற்றும் எங்கு சாட்சியங்கள் உள்ளன என்பதை வழங்கும் மற்றும் வலிந்து காணாமற்போதலுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிரான வழக்கு தொடரும் கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு.

ருவிட்டர்: #அவர்கள்இப்பொழுது எங்கே?

**3 Website available at http://www.disappearance.itjpsl.com/#lang=english**
**4 Sri Lanka: Account for Wartime Disappearances; More Than 20 People Last Seen in Army Custody Remain Missing, Human Rights Watch, 7 April 2011, https://www.hrw.org/news/2011/04/07/sri-lanka-account-wartimedisappearances#**
**5ITJP’s online report on 18 May 2009, http://white-flags.org**
**6 Press release: New ITJP website lists 280 names of enforced disappearance in Sri Lanka all on one day. 15 May 2018, http://www.itjpsl.com/assets/press/English-15-May-2018-Itjp-Press-release-Disappearance-Websiteenglish.pdf**

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT